# நகராட்சி நிர்வாக இயக்குநரகம்




URBAN ADMINISTRATIVE BUILDING

- நகராட்சி நிர்வாக இயக்குநரகம், மாநிலத்தில் உள்ள அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் மற்றும் மேற்பார்வையிடும் துறைத் தலைமையாக செயல்படுகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களை தலைவராகவும் மற்றும் இணை ஆணையர்கள், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் ஏழு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்களை (மண்டலத்திற்கு ஒருவர் என செங்கல்பட்டு, வேலூர், சேலம், திருப்பூர், தஞ்சாவூர், மதுரை மற்றும் திருநெல்வேலி மண்டலங்கள்) கொண்டுள்ளது.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மாநகராட்சிகளின் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) மக்கள் தொகை 80,65,843 ஆகும். இது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 11.18 சதவீதமாகவும், மொத்த நகர்ப்புர மக்கள் தொகையில் 23.08 சதவீதமாகவும் மற்றும் வருடாந்திர வளர்ச்சி விகிதம் 1.10 சதவீதமாகவும் உள்ளது. மாநகராட்சிகள் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) மொத்தம் 1,278.34 சதுர கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ளன. இது மாநிலத்தின் மொத்த நகர்ப்புர நிலப்பரப்பில் 9.38 சதவீதமாகும்.
- 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகராட்சிகளின் மக்கள் தொகை 90,18,646 ஆகும். இது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 12.50 சதவீதமாகவும், மொத்த நகர்ப்புர மக்கள் தொகையில் 25.80 சதவீதமாகவும் மற்றும் வருடாந்திர வளர்ச்சி விகிதம் 1.02 சதவீதமாகவும் உள்ளது. நகராட்சிகள் மொத்தம் 2560.12 சதுர கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ளன. இது மாநிலத்தின் மொத்த நகர்ப்புர நிலப்பரப்பில் 18.78 சதவீதமாகும்.
- தமிழ்நாட்டில் 20 மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மதுரை, கோயம்புத்துhர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, திண்டுக்கல்,
தஞ்சாவூர்,ஆவடி,நாகர்கோயில்,ஹோசூர்,தாம்பரம்,கும்பகோணம்,கடலூர்,கரூர்,சிவகாசி, காஞ்சிபுரம் மற்றும் 138 நகராட்சிகள், நகராட்சி நிர்வாக இயக்குனரின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன. மாநிலத்தில் உள்ள நகராட்சிகள் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் கீழ்காணுமாறு தரம் பிரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | தரம் | ஆண்டு வருமானம் (கோடியில்) | நகராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சிறப்பு நிலை | 10.00 க்கு மேல் | 8 |
| 2 | தேர்வு நிலை | 6.00–10.00 | 28 |
| 3 | முதல் நிலை | 4.00–6.00 | 34 |
| 4 | இரண்டாம் நிலை | 4.00க்கு கீழ் | 68 |
| | மொத்தம் | | 138 |

## நகராட்சி நிர்வாகத்துறை வரலாறு

- தமிழ்நாட்டில் நகராட்சி நிர்வாகத்துக்கென்று ஒரு நீண்ட நெடிய வரலாறு உண்டு. தென்னிந்தியாவில் கோலோச்சிய சோழர்களால் உருவாக்கப்பட்ட மிகச்சிறந்த அமைப்பான 'குடவோலை' முறை, நன்கு வடிவமைப்பட்ட, பிரதிநிதித்துவ அமைப்பு. இந்த அமைப்பே, தற்போதுள்ள மக்களாட்சி அமைப்புகளுக்கு அடிப்படையாகும்.
- நகராட்சி நிர்வாகத்துறை வரலாற்றில் பின்வரும் சிறப்பம்சங்கள் உள்ளன:



**அரசியலமைப்பு திருத்தம்:**

- 1992ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்பில் நகராட்சி உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பாக ஒரு புதிய பிரிவு கீழ்கண்ட காரணங்களுக்காக சேர்க்கப்பட்டது.
  - மூன்று வகையான நகராட்சி அரசியலமைப்புகள்:
    - கிராமங்களிலுருந்து நகர்ப்புறங்களாக மாறிக் கொண்டிருக்கும் பகுதிகளுக்காக நகர் பஞ்சாயத்து (டவுன் பஞ்சாயத்து)
    - சிறிய நகர்ப்புற பகுதிகளுக்காக நகரசபை
    - பெரிய நகர்ப்புற பகுதிகளுக்காக மாநகராட்சி
  - நகரசபைகளின் அமைப்பு
    - நகராட்சிகளின் வார்ட் அல்லது மற்ற மட்டங்களில் குழுவின் தலைவர் பிரதிநிதித்துவம் ஏதாவது இருந்தால்,
    - குறிப்பிட்ட நகரசபை பகுதியடங்கிய தொகுதியின் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் / பாராளுமன்ற உறுப்பினரின் பிரதிநிதித்துவம்
  - மாநில சட்டம் குறிப்பிட்டுள்ள முறைபடி நகராட்சி தலைவர் தேர்வு
  - மாநில சட்டம் வழங்கியபடி நகராட்சிகளின் வார்ட் அல்லது மற்ற மட்டங்களில் குழுக்கள் அமைப்பு
  - நகரசபைகளின் உறுப்பினர் மற்றும் தலைவர் ஆகிய இரு பதவிகளிலும் இட ஒதுக்கீடு
    - தாழ்த்தப்பட்டவர் மற்றும் பழங்குடியினருக்கான ஒதுக்கீடு
    - பெண்களுக்கான ஒதுக்கீடு
    - பிற்பட்ட மக்களுக்களின் நலனுக்காக ஒதுக்கீடு
- ஐந்து ஆண்டுகளுக்கு நிலையான பதவி
- நகராட்சிகள் நிர்ணயிக்கும் வரி தீர்வை மற்றும் கடன்கள், வரி தீர்வை மற்றும் கடன்கள் மூலம் கிடைத்த வருமானத்தை நகரசபைகளுக்கு மாநில அரசு மூலம் அளித்தல் மற்றும் மானியம் வழங்குதல்
- நகராட்சிகளின் நிதி வசதியை ஆய்வு செய்ய மாநில நிதி; ஆணையம் அமைப்பு

**கணக்கு தணிக்கை**

- அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்தல் நடத்திட மாநில தேர்தல் ஆணையம் அமைப்பு

**அரசியலமைப்பு திருத்தங்கள்:**

- ஒரு தனி பகுதியை சேர்த்து அரசியலமைப்பை திருத்தும் திட்டத்தின் மூலம் அரசியலமைப்பு சட்டம் 1992 (74வது திருத்தம்) நிறைவேறி முடிந்தது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பான திருத்தங்கள் அரசியலமைப்பு பகுதி IX–A ஆக இணைக்கப்பட்டுள்ளது. இது 243 p முதல் 243 zg வரை 17 விதிகள் கொண்டது. விதி 243–wவின்படி, அரசியலமைப்பு சட்டம் 1992 (74வது திருத்தம்) நகராட்சிகளுக்கு

12வது அட்டவணையின்படி கீழ்கண்டவாறு பட்டியலடப்பட்டுள்ள விஷயங்கள் தொடர்பாக சக்தி, அதிகாரம் மற்றும் பொறுப்பு அளிக்கிறது. அவை:–

### 12வது அட்டவணை விதி 243–டபில்யு(Article 243–w)

1. சிறு நகர திட்டமிடல் உட்பட நகர்ப்புற திட்டமிடல்
2. நில பயன்பாடு மற்றும் கட்டிட நிர்மான கட்டுப்பாடு
3. பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கான திட்டமிடல்
4. சாலைகள் மற்றும் பாலங்கள்
5. வீடு, தொழில் மற்றும் வணிக பயன்பாட்டிற்கான நீர் வழங்குதல்
6. பொது நலன், சுகாதார பாதுகாப்பு மற்றும் திடக்கழிவு மேலாண்மை
7. தீயணைப்புத் துறை
8. நகர்புற வனம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சூழலியல் அம்சங்கள் தொடர்பான மேன்மை
9. மாற்றுத் திறனாளிகள் உள்ளடங்கிய சமூகத்தின் நலிந்த பிரிவினரின் நலன் பாதுகாப்பு
10. சேரி பகுதிகள் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தி
11. நகர்புற ஏழ்மை ஒழித்தல்
12. பூங்காக்கள் தோட்டங்கள் விளையாட்டு மைதானங்கள் போன்ற நகர்ப்புற வசதிகள் உருவாக்குதல்
13. கலாச்சாரம், கல்வி மற்றும் அழகுணர்ச்சி அம்சங்கள் மேன்மை
14. புதைத்தல் மற்றும் இடுகாடுகள்; தகனம், சுடுகாடு மற்றும் மின்சார சுடுகாடு
15. கால்நடைப்பட்டி மற்றும் மிருகவதை தடுப்பு
16. பிறப்பு மற்றும் இறப்பு பதிவு உள்ளிட்ட முக்கிய புள்ளி விவரங்கள்
17. தெரு விளக்கு, பார்க்கிங் லாட், பேருந்து நிறுத்த வசதி மற்றும் பொது மக்கள் பயன்பாடு உள்ளடங்கிய பொது வசதிகள்
18. இறைச்சிக்கூடம் மற்றும் தோல் பதனிடும் இடங்கள் முறைப்படுத்துதல்

ARUL IAS ACADEMY

# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

## TWAD BOARD

TamilNadu Water Supply And Drainage Board

( Under Municipal Administration and Water Supply Department - MAWS )

- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 14.04.1971 அன்று வாரியச் சட்டம் 1970–ன் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்டபூர்வ நிறுவனமாகும். தமிழகத்தின், சென்னை பெருநகர வளர்ச்சிப் பகுதிகளைத் தவிர்த்து, அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் வசதிகளை மேம்படுத்தும் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைச் சார்ந்ததாகும். வாரியம் தனது சேவையின் எல்லையை விரிவாக்கம் செய்து பெரிய அளவிலான கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் பராமரிப்பையும் தன்னுள் கொண்டுள்ளது.
- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிறுவன அமைப்பின் தலைவராக திரு.**தா.கார்த்திகேயன், இ.ஆ.ப.,** அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களும், **திரு.வி.தட்சினாமூர்த்தி, இ.ஆ.ப.,** அவர்கள் மேலாண்மை இயக்குநராகவும் உள்ளார்கள். மேலும், அரசு துறைகளின் உயர்மட்ட இத்திய ஆட்சிப்பணி அதிகாரிகள், இணை மேலாண்மை இயக்குநர், நிதி மற்றும் பொறியியல் இயக்குநர்கள் அடங்கிய வாரிய இயக்குநர்களின் ஊக்கத்தினாலும் மற்றும் சீரிய வழிகாட்டுதலினாலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் செயல்பாடுகள் உந்தப்படுகின்றன. மேலும், மேலாண்மை இயக்குநர் அவர்கள், இணை மேலாண்மை இயக்குநர் மற்றும் கீழ்காணும் 3 இதர பிரிவு தலைமைகளின் உதவியுடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஒட்டுமொத்த பணிகளையும் நிர்வகிக்கிறார்.
  - **பொறியியல் பிரிவிற்கு தலைமை வகிக்கும் பொறியியல் இயக்குநர்**
  - **கணக்கு மற்றும் தணிக்கை பிரிவிற்கு தலைமை வகிக்கும் நிதி இயக்குநர்**
  - **நிர்வாகப் பிரிவிற்கு தலைமை வகிக்கும் செயலாளர் மற்றும் பொது மேலாளர்.**
- தலைமை அலுவலகத்தில் உள்ள திட்ட மேம்பாட்டு பிரிவு (Project Development Cell), திட்ட நிர்வாகப் பிரிவு (Project Management), ஒப்பந்த நிர்வாகப் பிரிவு (Contract Management), இயக்கம் மற்றும் பராமரிப்பு பிரிவு (Operation & Maintenance), பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்ட கண்காணிப்பு பிரிவு (MEGA Project Monitoring ) மற்றும் ஆராய்ச்சி, வடிவமைப்பு மற்றும் பயிற்சி பிரிவுகள் ஒவ்வொன்றும் ஒரு இணைத் தலைமைப் பொறியாளரின் கீழ் சிறப்புடன் செயப்படுகின்றது.
- வேலூர், தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களை தலைமையிடமாகக் கொண்டு நான்கு தலைமைப் பொறியாளர்கள் உள்ளனர். வாரியத்தின் திறன்பட்ட செயல்பாடு கீழ்காணும் பிரிவுகளின் சீரான பணிகளால் உறுதி செய்யப்படுகிறது.
  - மேற்பார்வைப் பொறியாளர் தலைமையிலான 16 வட்ட அலுவலகங்கள்

- நிர்வாகப் பொறியாளர் தலைமையிலான 85 கோட்ட அலுவலகங்கள்
- உதவி நிர்வாகப் பொறியாளர் தலைமையிலான 258 உப கோட்டம அலுவலகங்கள்
- சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 4 இடங்களில் உள்ள பயிற்சி மையங்கள்.
- கோயம்புத்தூர் (1999), மதுரை (2001), திருச்சி (2014) மற்றும் திண்டிவனம் (2014) ஆகிய 4 இடங்களில் உள்ள கட்டுமான பொருள் தர கட்டுப்பாடு பரிசோதனை கூடங்கள்

➢ தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் உள்ள பல பிரிவுகளும் சுமூகமாக ஒன்றிணைந்து சீரிய முயற்சியினால் அரசின் குடிநீர் மற்றும் சுகாதாரம் குறித்த இலக்குகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றுகின்றன.

➢ மேலும் மாநில அளவிலான ஒரு நீர் பரிசோதனைக் கூடம், 31 மாவட்ட, 56 துணை மாவட்ட மற்றும் 25 ஒன்றிய அளவிலான பரிசோதனைக் கூடங்கள் என மொத்தமாக மாநிலத்திலுள்ள 113 குடிநீர் பரிசோதனைக் கூடங்கள் மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குவதை உறுதிசெய்ய உதவுகின்றன. மாநில நீர் பரிசோதனைக் கூடத்தின் மூலம் உருவாக்கப்பட்ட கள நீர் பரிசோதனைக் கருவி (Field water testing kit), சமூக அளவில் நாடு முழுவதும் பெருவாரியாக பயன்படுத்தப்படுவதுடன் குடிநீர் தரம் மற்றும் ஆரோக்கியம் சார்ந்த தாக்கம் ஆகியவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உதவுகிறது.

➢ தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் உள்ள நிலநீர் பிரிவு, நீர் ஆதாரங்களின் நீடித்த நிலைத்த தன்மையை அதிகரிக்கச் செய்ய அறிவியல் ரீதியான நிலத்தடி நீர் கண்டறிதல், பயன்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் கையாளுதல் ஆகியவற்றுடன் மழைநீர் சேகரிப்பு ஆகியவற்றையும் மேற்கொள்கிறது. நீராதாரங்களை குறிக்கும் வரைபடங்கள், ஒன்றிய அளவிலான நிலத்தடி நீர் வளங்களை குறிக்கும் வரைபடங்களை தயாரித்தல், பாதுகாப்பான அளவில் நீரை கையாளுவதற்கான ஆய்வு மேற்கொள்ளுதல் மற்றும் இதர ஆராய்ச்சி பணிகளை செய்ய புவியியல் தகவல் முறை (GIS) மற்றும் தொலையுணர்வு நுட்பம் (Remote Sensing) ஆகியவற்றை பயன்படுத்த இப்பிரிவு வழிகாட்டுகிறது.

➢ மின்னணு தரவு செயலாக்க பிரிவு (EDP), வாரியத்தில் தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான பயன்பாடுகளை (applications) முன்னின்று செயல்படுத்தி வருகிறது. தகவல் தேவைகள், வலைதளத்தின் மூலம் கீழ்கண்ட இணைய வழி மின் ஆளுமை அமைப்புகள் வாயிலாக வழங்கப்படுகின்றன.

- தகவல் மேலாண்மை அமைப்பு சார்ந்த மின் ஒப்பந்தபுள்ளி, திட்ட மேலாண்மை, கூட்டுக் குடிநீர்த் திட்ட பராமரிப்பு, மனிதவள மேலாண்மை, நிதி மேலாண்மை, இணைய வழி ஆய்வு கண்காணிப்பு போன்றவை.
- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய வலைதளம் மற்றும் மழைநீர் சேகரிப்பு வலைதளம் ஆகியவற்றின் மூலம் மக்களுக்கு தகவல்களை பரப்புதல்.
- வாரியத்திற்கான கட்டுமான பொருள் குறித்த தரகட்டுப்பாடு தகவல் அமைப்பு

- அனைத்து அலுவலகங்களிலும், நீர் பரிசோதனைக் கூடங்கள் உட்பட, இணையதள வசதி
- பத்து இடங்களில் காணொலி கூட்டங்களுக்கு வசதி

➢ எதிர்வரும் வாய்ப்புகளையும் புதிய சூழ்நிலைகளையும் வாரியம் தனக்கு சாதகமாக்கிக் கொண்டு மாற்றங்களை தழுவிச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வெளி உதவி இல்லாமலேயே தன் நிறுவனத்தின் திறன் கொண்டு திட்டங்களை வடிவமைத்தல், மதிப்பிடுதல், செயல்படுத்துதல் போன்ற முக்கிய பணிகளை மேற்கொள்கிறது. வாரியத்தின் அர்ப்பணிப்பான செயல்பாடுகள் தொடர்ச்சியான முன்னேற்றத்தை நோக்கியே உள்ளது. தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் கீழ்கண்ட தனித்துவங்களை பெற்றுள்ளது.

- குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று துறையில் திறமையான சேவைகளை வழங்கியமைக்காக மத்திய/மாநில அரசுகள் மட்டுமல்லாமல் சர்வதேச/தேசிய அமைப்புகளிடமிருந்து பல பாராட்டுக்களையும் விருதுகளையும் பெற்றுள்ளது.
- கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் உள்ள கட்டுமான பொருட்கள் தர கட்டுப்பாடு பரிசோதனை கூடங்கள் NABL சான்றிதழ் பெற்றுள்ளன.
- சென்னையில் உள்ள மாநில குடிநீர் பரிசோதனைக் கூடம் NABL சான்றிதழ் பெற்றதுடன் மாநில அளவிலான வழிகாட்டி பரிசோதனைக் கூடமாக மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களான ஒகேனக்கல் மற்றும் வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

ARUL IAS ACADEMY

# சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்

## வரலாற்றுப் பின்புலம்

- 19ஆம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதி வரையிலும். சென்னையில் ஆங்காங்கே இருந்த அதிக ஆழமில்லாத கிணறுகள். குளங்களில் இருந்துதான் சென்னைக்கு நீர் கிடைத்து வந்தது. திரு.பிரேசர் என்ற கட்டுமானப் பொறியாளர் சென்னைக்கு வடமேற்கே 160 கி.மீ தொலைவில் இருக்கும் கொற்றலையாறில் இருந்து சென்னைக்கு தண்ணீர் கொண்டு வரலாம் என்ற கருத்துருவை அப்போதைய அரசாங்கத்திடம் முன்வைத்தார். அது ஏற்கப்பட்டது. கொற்றலையாறின் குருக்காக தாமரைப்பாக்கத்தில் ஒரு அணையைக் கட்டி அங்கிருந்து நீரை சோழவரம் ஏரிக்கு திருப்பிவிட்டு அங்கிருந்து புழல் ஏரிக்கு கால்வாய் வழியாகத் தண்ணீரை அனுப்பலாம் என்ற திட்டம் இந்தக் கருத்துருவில் சொல்லப்பட்டிருந்தது. இதற்கான பணிகள் ரூ.18.50 இலட்சம் செலவில் 1870ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்டன. செங்குன்றத்தில் நீரை அடைத்து வைத்திருந்து தேவைக்கேற்ப நிலத்தின் வழியாக சென்னைக்கு நீரினை அனுப்புவதற்காக ஒரு அடைப்புத் தடுப்பு கட்டப்பட்டது. சென்னையை நீர் வந்தடைந்ததும் கீழ்ப்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள நீர் ஏருகால் அமைப்பில் சேகரிக்கப்பட்டு அங்கிருந்து அறிவியல் பூர்வமாக வடிவமைக்கப்பட்ட வார்ப்பிரும்புக் குழாய் கிளைப்பிரிவுக் கட்டமைப்பின் மூலம் நகரின் பல பகுதிகளுக்கும் நீரை அனுப்பி வைக்கும் பகிர்மான அமைப்பு உருவாக்கப்பட்டது.
  - கீழ்ப்பாக்கத்தில் உள்ள ஜோன்ஸ் கோபுரத்திலிருந்து நிலத்தடியில் அமைக்கப்பட்ட மூடப்பட்ட கட்டுமான நீர் செல் குழாய்கள் அமைத்தல்.
  - கீழ்ப்பாக்கம் நீர்ப் பணியிடத்தில் மணலை மெல்ல மெல்ல வடிகட்டும் 14 வடிகட்டி அமைப்புகளைக் கட்டுதல்.
  - கீழ்ப்பாக்கத்தில் மூன்று தூய நீர் சேகரிப்புக் கட்டுமானங்கள் அமைத்தல்.
  - கடும்பணி செய்யும் நீராவி எந்திரங்களை அமைத்தல்.

- குடிநீர்ப் பகிர்மானக் குழாய்கள் கீழ்ப்பாக்கத்தில் நீர்ப் பாய்ச்சும் முதன்மை முகப்பு ஆரம்பமாகும் இடத்தில் 48" ஸ்டீல் வார்ப்பிரும்பு உந்து அமைப்பினை அமைத்தல்.
- போதுமான அழுத்தத்துடன் நீர் வழங்கப்படுவதை உறுதி செய்யும் விதத்தில் நீர்ப் பகிர்மான அமைப்பினை மாற்றியமைத்து மருவடிவமைப்பு செய்தல்.

➢ திரு.ஜே.டபிள்யூ மேட்லியின் கூற்றுப்படி 1961ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட சென்னையின் 6.6 இலட்சம் மக்களுக்கு ஆளுக்கு 25 காலன் தண்ணீரை தினமும் வழங்கப்படுவதற்குப் போதுமானதாக இருக்கும் என்று கருதப்பட்டது மேற்கொண்டும் இதனை மேம்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது என்பது 1936ஆம் ஆண்டிலேயே உணரப்பட்டது.

## சென்னை பெருநகர நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியம்

➢ சென்னை பெருநகர நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியம் (CMWSSB) அல்லது (மெட்ரோவாட்டர்)1978 இல் நிறுவப்பட்டது, சென்னை மாநகராட்சிக்குள் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அமைப்பை இது பராமரிக்கிறது. CMWSSB அருகிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மொத்தமாக குடிநீர் விநியோகம் செய்கிறது.

## CMWSSB இன் செயல்பாட்டு பகுதி

➢ சென்னை பெருநகரப் பகுதி (CMA) – 1189.00 ச.கி.மீ
➢ சென்னை நகரப் பகுதி (மாநகராட்சி எல்லைகள்) – 426.00 சதுர கி.மீ
➢ மக்கள் தொகை (லட்சங்களில்) – 74.38
➢ CMWSSB தற்போது 15 பகுதி அலுவலகங்கள் மற்றும் 200 டிப்போ அலுவலகங்கள் மூலம் சேவைகளை வழங்கி வருகிறது.

## சென்னை நகர விவரம்:

➢ சென்னை நகரத்திற்கு தண்ணீர் விநியோகத்துக்காக மேற்பரப்பு தண்ணீர் மற்றும் நிலத்தடி நீர் ஆகியவை எடுக்கப்படுகின்றன. பூண்டி சோழவரம், ரெட்ஹில்ஸ் மற்றும் செம்பரம்பாக்கம் ஏரிகள் மேற்பரப்பு ஆதாரங்கள். செங்குன்றம் ஏரியிலிருந்து ஏரிக்கு அருகில் புழல், சூரப்பேட்டை மற்றும் கீழ்ப்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள நீர் சுத்திகரிப்புநிலையங்களுக்கு நீர் கொண்டு செல்லப்பட்டு, சென்னை மாநகருக்கு சுத்திகரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

➢ செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து சுத்திகரிக்கப்பட்ட நீரை நகருக்கு வழங்குவதற்காக 19.072007 அன்று செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்புநிலையம் நிறுவப்பட்டது. அக்டோபர் 2004 முதல் சென்னை நகரின் தெற்கே சுமார் 230km கி.மீ. தொலைவில் அமைந்துள்ள வீராணம் ஏரி சென்னை மாநகர குடிநீர் வழங்கலுக்கு மற்றொரு ஆதாரமாக விளங்குகிறது. இந்த நீர் வடகுத்து நீர் சுத்திகரிப்புநிலையத்தில் சுத்திகரிக்கப்படுகிறது. போரூர் குடிநீர் வினியோக நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, சென்னை நகருக்கு வினியோகிக்கப்படுகிறது. சூரப்பேட்டை குடிநீர்

- சுத்திகரிப்பு நிலையம் 01.08.2009 அன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. இது தவிர, CMWSSB 31.07.2010 முதல் மீஞ்சூரில் உள்ள உப்புநீக்கும் ஆலையிலிருந்து சுமார் 100 MLD தண்ணீரையும், 22.022013 முதல் நெம்மேலியில் உள்ள உப்புநீக்கும் ஆலையிலிருந்து 100 MLD தண்ணீரையும் எடுக்கிறது.
- பூண்டி, தாமரைப்பாக்கம், வெள்ள சமவெளி, கன்னிகைப்பாறு, பஞ்செட்டி, மீஞ்சூர், தெற்கு கடற்கரை நீர்னிலைகள், கடிலம் மற்றும் பரவனாறு ஆற்றுப்படுகைகளில் அமைந்துள்ள கிணறுகள் நிலத்தடி நீர் ஆதாரங்களாக இருக்கின்றன.
- சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியம், சென்னை மாநகரம் மற்றும் ஆவடி போன்ற நகரமயமாக்கப்பட்ட பகுதிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை வழங்குகிறது. அனகாபுத்தூர், கன்டோன்மென்ட், கவுல் பஜார், முனாவூர், பல்லாவரம், பொழிச்சலூர் போன்ற நகரமயமாக்கப்பட்ட பகுதிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை மொத்தமாக வழங்குகிறது. உள் விநியோகம் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளால் மேற்கொள்ளப்படுகிறது மேலும் மணலியில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கும் தண்ணீர் வழங்கப்படுகிறது.
- மூன்று ஆறுகளான கொசத்தலையாறு, கூவம் மற்றும் அடையாறு ஆகியவை சென்னை பெருநகரப் பகுதி வழியாக செல்கின்றன, இந்த ஆறுகள் அமைதியாக கடந்து சென்று கடலில் கலக்கின்றன (வங்காள விரிகுடா). பக்கிங்ஹாம் கால்வாய்,மனிதனால் உருவாக்கப்பட்ட கால்வாய், இந்த பெருநகரத்தின் வழியாக வடக்கு–தெற்காக செல்லும் மற்றொரு பெரிய நீர்வழியாக இருக்கிறது.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நகரங்களை இணைக்கும் சாலை, ரயில், வான்வழி மற்றும் கடல் போக்குவரத்துக்கான முக்கிய போக்குவரத்து மையமாக சென்னை விளங்குகிறது.
- இந்தியாவின் முக்கிய கல்வி மையங்களில் ஒன்றான சென்னையில் ஏராளமான கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் உள்ளன.

ARUL IAS ACADEMY